தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 11/பேரூ/2022

நாள் 07.03.2022

திரு. M. சிவசங்கரன்,
விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தாமரைக்குளம் பேரூராட்சி, தேனி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், 264E, சுப்பன் தெரு, விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. சிவசங்கரன் என்பவரின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2022ல் பெறப்பட்டு, 11/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், 264E, சுப்பன் தெரு, விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. சிவசங்கரன் என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தாமரைக்குளம் பேரூராட்சிக்கு குடிநீர் உபகரணங்கள் மற்றும் ஆழ்குழாய் மோட்டார் மற்றும் இதர உபகரணங்களை ரூ.1,76,886/–க்கு (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரத்து எண்ணூற்று எண்பத்தாறு மட்டும்) தான் விநியோகம் செய்துள்ளதாகவும், இதற்கு பேரூராட்சி காசோலை மூலம் வழங்கிய தொகை ரூ.9,950/– (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) போக மீதித் தொகை ரூ.1,66,936/– (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தாறு மட்டும்) வழங்கவேண்டியுள்ளதாகவும், மேற்படி தொகையை வழங்கிடக்கோரி கடந்த ஓராண்டாக தாமரைக்குளம் பேரூராட்சியை அணுகியும் தொகை வழங்கப்படாமல்

உள்ளதாகவும், எனவே தமக்கு வழங்கப்படவேண்டிய மேற்படி மீதித் தொகையை வழங்கிட விசாரணை மேற்கொண்டு தாமரைக்குளம் பேரூராட்சிக்கு உத்தரவிட்டு உரிய ஆணையினைப் பிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரர் தமது புகார் மனுவுடன் புகார் குறித்து தாமரைக்குளம் பேரூராட்சி நிர்வாக அலுவலர் மற்றும் உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, தேனி மாவட்டத்திற்கு அனுப்பிய **8.10.2021** நாளிட்ட கடிதம், மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய **7.12.2021** நாளிட்ட கடிதம் மற்றும் தன்னால் தாமரைக்குளம் பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட குடிநீர் உபகரணங்கள், ஆழ்குழாய் மோட்டார் மற்றும் உபகரணங்களுக்கான பட்டியல் நகல்கள், தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரது கையொப்பம் மற்றும் முத்திரையுடன் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனிக்கு பொருட்கள் தேவைக்கு அளித்துள்ள கடித நகல்கள் ஆகியவற்றை புகாருக்கான ஆதார ஆவணங்களாக இணைத்தனுப்பியுள்ளார்.

3. தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் **01.03.2022** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ **22.02.2022** நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் **1.3.2022** அன்று திருநெல்வேலி முகாமில் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

4. மனுதாரர் திரு. எம். சிவசங்கரன் அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம், தாமரைக்குளம் பேரூராட்சிக்கு குடிநீர் உபகரணங்கள் மற்றும் ஆழ்குழாய் மோட்டார் மற்றும் இதர உபகரணங்களை விநியோகம் செய்துள்ளது தொடர்பாக ரூ.**1,76,886/–**இல் (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரத்து எண்ணூற்று எண்பத்தாறு மட்டும்) பேரூராட்சி காசோலை மூலம் வழங்கிய தொகை ரூ.**9,950/–** (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) போக மீதம் ரூ.**1,66,936/–** (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தாறு மட்டும்) வழங்கவேண்டியுள்ளது. மேற்கண்ட பொருட்களை விநியோகம் செய்து ஓராண்டுக்கு மேலாகியும், தாமரைக்குளம் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் பலமுறை அணுகியும், நிலுவைத் தொகை வழங்காததால் இது தொடர்பாக பேரூராட்சி உதவி இயக்குநர் மற்றும் தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியும், நேரில் தொடர்பு கொண்டும் எனக்கு வழங்கவேண்டிய மேற்கண்ட நிலுவைத் தொகையை வழங்கக்கோரினேன். ஆனால், மேற்கண்ட அலுவலர்களும் எனக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேற்கண்ட பொருட்கள் பேரூராட்சியில் சப்ளை செய்யும்போது, பேரூராட்சி பிளம்பர் திரு. சாமிராஜ் என்பவரிடம் கொடுத்தேன். ஆனால், கொடுத்ததற்கான அத்தாட்சி ஏதும் பேரூராட்சியிலிருந்து நான் பெறவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மேற்கண்ட நிலுவைத் தொகையை எனக்கு கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

5. தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "மனுதாரர் திரு. சிவசங்கரன், தாமரைக்குளம் பேரூராட்சிக்கு சப்ளை செய்ததாக தெரிவித்துள்ள பொருட்களுக்கான தொகைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. தற்போது இம்முறைமன்றத்தில் தெரிவித்துள்ள தனக்கு சேரவேண்டியதாக கூறப்படும் தொகைக்கான பொருட்களை பேரூராட்சியில் அளித்தபோது யாரிடம் பொருட்களைக் கொடுத்தார் என்கின்ற விவரம், பொருட்களை கொடுத்ததற்கான அத்தாட்சி ஏதும் பேரூராட்சியில் சமர்ப்பிக்கவில்லை. மேலும், பொருட்களை அளித்ததற்கான பதிவுகள் ஏதும் பேரூராட்சியில் இல்லை. எனினும், மனுதாரர் பொருட்களை கொடுத்ததாக கூறப்படும் பிளம்பர் திரு. சாமிராஜ் என்பவரிடம் இதுகுறித்து விசாரித்து, பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் ஆலோசித்து மனுதாரருக்கு சேரவேண்டிய தொகையை வழங்குவது குறித்து ஆவன செய்யப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் புகார் மனு குறித்து 1.3.2022 அன்றைய நேரடி விசாரணையின்போது அளித்துள்ள 28.2.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் தேனி மாவட்டம், தாமரைக்குளம் பேரூராட்சியில் செயல் அலுவலராக திரு. மா.பா. கௌஸ் முகைதீன் என்பவர் 04.11.2019 முதல் பொறுப்பேற்று 08.05.2021 வரை பணிபுரிந்து வந்துள்ளார். 8.5.2021 அன்று அவர் இறந்துவிட்டார். 2019–2020ஆம் ஆண்டு தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பொருட்கள் மற்றும் 1.5 எச்.பி மின் மோட்டார்கள் சப்ளை செய்வதற்கு ஸ்ரீ கார்த்திகேயா ஏஜென்சி, பெரியகுளம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்ததன் காரணமாக பேரூராட்சி மன்றத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஆனால், செயல் அலுவலர் திரு. மா.பா. கௌஸ் முகைதீன் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்தில் கீழ்க்கண்ட விவரப்படி குடிநீர் விநியோகப் பொருட்கள், 1.5 எச்.பி மின் மோட்டாரா வாங்கியதற்கு காசோலை மூலம் தொகை வழங்கப்பட்டுள்ளது:-

| வரிசை எண் | பி.பி.வி எண்/ நாள் | வாங்கிய பொருட்கள் விவரம் | தொகை (ரூபாய்) | காசோலை எண்/நாள் |
|---|---|---|---|---|
| 1. | 398/2011.2019 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,800 | 613347/SBI |
| 2. | 402/22.11.2019 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,800 | 613351/SBI |
| 3. | 407/25.11.2019 | 1.5 எச்.பி மின்மோட்டார் | 9,900 | 613356/SBI |
| 4. | 421/27.11.2019 | 1.5 எச்.பி மின்மோட்டார் | 9,900 | 728473/IOB |
| 5. | 431/02.12.2019 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,800 | 733929/CB |
| 6. | 439/4.12.2019 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,800 | 733937/CB |
| 7. | 463/10.12.2019 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,800 | 890580/SBI |
| 8. | 488/18.12.2019 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,900 | 733277/CB |
| 9. | 507/02.1.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,800 | 745566/CB |
| 10. | 516/03.1.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 6,499 | 156535/CB |
| 11. | 522/06.1.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,800 | 156541/CB |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | 535/08.1.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,900 | 156674/CB |
| 13. | 544/10.1.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,800 | 156685/CB |
| 14. | 716/23.3.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 1,86,047 | 233724/IOB |

மேற்கண்ட விவரங்களின்படி 2019–2020ஆம் ஆண்டு குடிநீர் விநியோகப் பொருட்கள், 1.5 எச்.பி மின்மோட்டார்கள் வாங்கப்பட்டதற்கு தொகையானது விமலா எலக்ட்ரிக்கல்ஸ்க்கு காசோலை மூலம் வழங்கப்பட்டு காசாக்கப்பட்டுள்ளது.

7. 2020–2021ஆம் ஆண்டு தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பொருட்கள் சப்ளை செய்வதற்கு ஸ்ரீ கார்த்திகேயா ஏஜென்ஸ்சீஸ், பெரியகுளம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்ததன் அடிப்படையில், பேரூராட்சி மன்ற அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஆனால், செயல் அலுவலர் திரு. மா.பா. கௌஸ் முகைதீன் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்தில் கீழ்க்கண்ட விவரப்படி குடிநீர் விநியோகப் பொருட்களை வாங்கிவிட்டு அதற்கு காசோலை மூலம் தொகையையும் வழங்கியுள்ளார்:-

| வரிசை எண் | பி.பி.வி எண்/ நாள் | வாங்கிய பொருட்கள் விவரம் | தொகை (ரூபாய்) | காசோலை எண்/நாள் |
|---|---|---|---|---|
| 1. | 196/10.6.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 38,970 | 230313/IOB |
| 2. | 221/17.06.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 37,880 | 505330/SBI |
| 3. | 228/19.06.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 39,300 | 505337/SBI |
| 4. | 234/22.06.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 29,500 | 505342/SBI |
| 5. | 360/13.08.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,900 | 505423/SBI |
| 6. | 383/27.08.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,379 | 230397/IOB |
| 7. | 433/28.09.2020 | தெரு விளக்கு உபகரணங்கள் | 9,250 | 505242/SBI |
| 8. | 436/28.09.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,450 | 505245/SBI |
| 9. | 459/07.10.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,550 | 729742/CB |
| 10. | 465/08.10.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,380 | 223380/ IOB |
| 11. | 484/16.10.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,650 | 230259/ IOB |
| 12. | 494/20.10.2020 | தெருவிளக்கு உபகரணங்கள் | 9,240 | 230264/ IOB |
| 13. | 520/3.11.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,660 | 223751/ IOB |
| 14. | 528/04.11.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,710 | 230282/ IOB |
| 15. | 545/09.11.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,700 | 223764/ IOB |
| 16. | 552/11.11.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 6,400 | 729748/CB |
| 17. | 633/10.12.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,880 | 505273/SBI |
| 18. | 639/11.12.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,840 | 505277/SBI |
| 19. | 657/15.12.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,779 | 230520/IOB |
| 20. | 661/16.12.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,500 | 505284/SBI |
| 21. | 670/17.12.2020 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,900 | 726722/CB |
| 22. | 791/16.2.2021 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,409 | 230587/IOB |
| 23. | 832/02.03.2021 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,730 | 230610/IOB |
| 24. | 871/15.03.2021 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 8,250 | 230648/IOB |

மேற்கண்ட விவரப்படி 2020–2021ஆம் ஆண்டு குடிநீர் விநியோகப் பொருட்கள் தெருவிளக்கு உபகரணங்கள் வாங்கியதற்கு விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திற்கு தொகை காசோலை மூலம் வழங்கப்பட்டு காசாக்கப்பட்டுள்ளது.

2021–2022ஆம் ஆண்டு தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பொருட்கள் சப்ளை செய்வதற்கு ஸ்ரீ கார்த்திகேயா ஏஜென்சி, பெரியகுளம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்ததன் அடிப்படையில் பேரூராட்சி மன்றத்தால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஆனால், செயல் அலுவலர் திரு. மா.பா. கௌஸ் முகைதீன் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்தில் கீழ்க்கண்ட விவரப்படி குடிநீர் விநியோகப் பொருட்கள் வாங்கியதற்கு தொகையை காசோலை மூலம் வழங்கியுள்ளார்:-

| வரிசை எண் | பி.பி.வி எண்/ நாள் | வாங்கிய பொருட்கள் விவரம் | தொகை (ரூபாய்) | காசோலை எண்/நாள் |
|---|---|---|---|---|
| 1. | 17/09.04.2021 | தெருவிளக்கு உபகரணங்கள் | 9,600 | 135811/CB |
| 2. | 37/16.4.2021 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,949 | 223708/ IOB |
| 3. | 43/19.4.2021 | குடிநீர் விநியோகப் பொருட்கள் | 9,900 | 227314/IOB |

மேற்கண்ட விவரப்படி 19.4.2021ஆம் தேதி முடிய குடிநீர் விநியோகப் பொருட்கள், தெருவிளக்கு உபகரணங்கள் வாங்கப்பட்டதற்கான தொகை, செயல் அலுவலர் திரு. மா.பா. கௌஸ் முகைதீன் என்பவரால் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திற்கு காசோலை மூலம் வழங்கப்பட்டு, காசாக்கப்பட்டுள்ளது.

8. தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பொருட்கள் வாங்குவதற்கு குடிநீர் விநியோகப் பணியாளரிடமிருந்து பொருட்களின் தேவைக்கான விண்ணப்பம் பெறப்பட்டு, பொருட்கள் விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்கப்படும். பொருட்கள் சப்ளை செய்யப்படும்போது நிறுவனத்திடமிருந்து இன்வாய்ஸ் பெறப்படும். சப்ளை செய்யப்பட்ட பொருட்களை குடிநீர் விநியோகப் பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் இருப்பு பதிவு செய்யப்படும். பில் வரப்பட்டவுடன் தொகை காசோலை மூலம் வழங்கப்படும். இதுவே நடைமுறையாகும். திரு. மா.பா.கௌஸ் முகைதீன் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திடமிருந்து 19.4.2021ஆம் தேதிவரை வாங்கப்பட்ட பொருட்களுக்கு காசோலை மூலம் தொகை வழங்கியுள்ளார். காசோலைகள் அனைத்தும் காசாக்கப்பட்டுள்ளன.

9. தற்போது விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவன உரிமையாளர் குடிநீர் உபகரணங்கள் மற்றும் ஆழ்குழாய் மோட்டார் மற்றும் இதர உபகரணங்களை விநியோகம் செய்ததற்கு வழங்கப்படவேண்டிய தொகை ரூ.1,76,886/–ல் ஏற்கனவே காசோலை மூலம் வழங்கப்பட்ட ரூ.9,950/– போக மீதித்தொகை ரூ.1,66,936/– வழங்கப்படவேண்டுமென கோரியுள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ள தொகைக்கு தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோக இருப்புப் பதிவேட்டில் பொருட்கள் வாங்கப்பட்டதற்கான இருப்புப் பதிவுகள் இல்லை. குடிநீர் விநியோகப் பொருட்கள் வாங்கப்பட்டதற்கான பில்களும், எவ்வித ஆவணங்களும் இல்லை. இவர் குறிப்பிடும் தொகையான ரூ.9,950/–க்கான காசோலை தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் ஒருவராலும் வழங்கப்படவும்

இல்லை. தாமரைக்குளம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றிய திரு. மா.பா. கௌஸ் முகைதீன் என்பவர் **8.5.2021** அன்று மரணமடைந்ததை தனக்குச் சாதகமாக பயன்படுத்தி பொய்யான புகாரை மனுதாரர் தெரிவித்துள்ளார் என்று தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**10.** மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம், தாமரைக்குளம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட **28.2.2022** நாளிட்ட விளக்க அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் தாமரைக்குளம் பேரூராட்சிக்கு குடிநீர் உபகரணங்கள் மற்றும் ஆழ்குழாய் மோட்டார் மற்றும் இதர உபகரணங்களை **ரூ.1,76,886/–க்கு** (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரத்து எண்ணூற்று எண்பத்தாறு மட்டும்) விநியோகம் செய்துள்ளதாகவும், இதற்கு பேரூராட்சி காசோலை மூலம் வழங்கிய தொகை **ரூ.9,950/–** (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) போக, மீதித் தொகை **ரூ.1,66,936/–** (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தாறு மட்டும்) தமக்கு வழங்கவேண்டியுள்ளதாகவும், மேற்படி தொகையை வழங்கிடக்கோரி கடந்த ஓராண்டாக தாமரைக்குளம் பேரூராட்சியை அணுகியும் தொகை வழங்கப்படாமல் உள்ளதாகவும், எனவே தமக்கு வழங்கப்படவேண்டிய மேற்படி மீதித் தொகையை வழங்கிட தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு உத்தரவிடுமாறு புகார் மனு அளித்துள்ளார்.

- அவர் தேனி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இதுகுறித்து அளித்துள்ள **7.12.2021** நாளிட்ட புகார் மனுவில் **4.10.2020ல் ரூ.41,305/– 24.10.2020ல் ரூ.36,550/–, 22.11.2020ல் ரூ.7,575/–, 27.11.2020ல் ரூ.12,315/–, 14.12.2020ல் ரூ.25,300/–, 16.12.2020ல் ரூ.16,774/–, 30.12.2020ல் ரூ.25,157/–** மற்றும் **6.3.2021ல் ரூ.12,000/–க்கும்**, ஆகமொத்தம் **ரூ.1,76,886/–க்கு** பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டதென்றும், இதில் காசோலை மூலம் வழங்கப்பட்ட **ரூ.9,950/–** போக மீதித் தொகை **ரூ.1,66,936/–** நிலுவையாக உள்ளதென்று குறிப்பிட்டுள்ளார்.

- மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் அந்தந்த தேதிகளில் அவரால் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள Quotation நகல்களே (Quotation Nos.68/4.10.2020, 3/24.10.2020, 7/22.11.2020, 8/27.11.2020, 9/14.12.2020, 10/16.12.2020, 11/30.12.2020 and 13/6.3.2021) என்பது கண்டறியப்பட்டன. இதில் எந்த கொட்டேஷனிலும் விமலா எலக்ட்ரிக்கல்ஸ் உரிமையாளர் கையொப்பம் மற்றும் நிறுவன முத்திரை இடம்பெறவில்லை.
- கொட்டேஷன் எண்.**68/4.10.2020ன்** கூட்டுத் தொகை **ரூ.32,135/–** மட்டுமே ஆகும். ஆனால் **ரூ.40,955** மற்றும் ஆட்டோ கட்டணம் **ரூ.350/–ம்** சேர்த்து **ரூ.41,305/–** என குறிப்பிடப்பட்டுள்ளது அறியப்படுகிறது.

- அனைத்து கொட்டேஷனுக்குமான மொத்த கூட்டுத்தொகை ரூ.1,76,946/–ஆக கணக்கீட்டின்படி வரும் நிலையில், விநியோகத் தொகை ரூ.1,76,886/– எனவும், இதில் ரூ.9,950/– காசோலை வழங்கியது போக மீதித்தொகை ரூ.1,66,936/– வழங்கப்படவேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

- விமலா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரது முத்திரையுடன் கையொப்பமிடப்பட்டு அளிக்கப்பட்டுள்ள கடிதங்கள் சிலவற்றில் சாமிராஜ் என்பவரது கையொப்பம் இடம்பெற்றுள்ளது.

- மனுதாரரால் வழங்கப்பட்டுள்ள Cash Bill No.840/4.12.20, 848/7.12.2020, 850/9.12.2020, 851/12.12.2020, 853/14.12.2020, 859/18.12.2020, 861/Nil date, 863/24.12.2020, 865/28.12.2020, 867/30.12.2020, 869/31.12.2020 ஆகியவற்றின் கூட்டுத் தொகை ரூ.1,02,900/ஆக உள்ள நிலையில், இந்தத் தொகைக்கும், அவரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள மீதித்தொகையான ரூ.1,66,936/–க்குமான தொடர்பு ஒன்றுக்கொன்று வேறுபாடுடையதாக உள்ளது.

- மனுதாரர் அளித்துள்ள வாக்குமூலத்தில் தான் பொருட்களை பேரூராட்சியில் சப்ளை செய்யும்போது, பேரூராட்சி பிளம்பர் திரு. சாமிராஜ் என்பவரிடம் கொடுத்ததாகவும், ஆனால் கொடுத்ததற்கான அத்தாட்சி எதனையும் பேரூராட்சியிலிருந்து பெறவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இது ஏற்கத்தக்கதல்ல. அவ்வாறு இதனை ஏற்பதாக எடுத்துக்கொண்டாலும், பேரூராட்சி பிளம்பர் தான் வாங்கிக்கொண்ட பொருட்கள் குறித்த விவரத்தினை உடனே செயல் அலுவலருக்கு தெரிவித்திருக்கவேண்டும். மேலும் பட்டியல் ஏதும் அளிக்காமல் நிறுவனம் பொருட்களை சப்ளை செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளதும் ஏற்கத்தக்கதல்ல. இதன் மூலம் பொருட்கள் கொள்முதல் குறித்து முறையான நடைமுறைகள் ஏதும் பேரூராட்சிகளில் பின்பற்றப்படுவதில்லை என்பதை இந்நேர்வு எடுத்துக்காட்டியுள்ளது.
- தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் பேரூராட்சியில் பொருட்களை அளித்ததற்கான பதிவுகள் எதுவும் பேரூராட்சியில் இல்லை என்றும், மனுதாரரால் கொடுத்ததாக கூறப்படும் பிளம்பர் திரு. சாமிராஜ் என்பவரிடம் விசாரித்தும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் ஆலோசித்தும் மனுதாரருக்கு சேரவேண்டிய தொகையை வழங்குவது குறித்து ஆவன செய்யப்படுமென்று குறிப்பிட்டுள்ளார்.

- தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 28.2.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் 2019–2020ஆம் ஆண்டு தாமரைக்குளம் பேரூராட்சிக்கு குடிநீர் விநியோகப் பொருட்கள் மற்றும் 1.5 எச்.பி மின் மோட்டார்கள் சப்ளை செய்வதற்கு ஸ்ரீ கார்த்திகேயா ஏஜென்சீஸ், பெரியகுளம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்ததன் அடிப்படையில் மன்றத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

- அவ்வாறிருக்க முந்தைய செயல் அலுவலர் திரு. மா.பா. கௌஸ் முகைதீன் (8.5.2021ல் காலமானவர்) என்பவரால் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.3,03,546/–க்கு பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றிற்கான தொகை காசோலை மூலம் வழங்கப்பட்டு காசாக்கப்பட்டுள்ளன.

- அதேபோல் 2020–2021ஆம் ஆண்டு தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பொருட்கள் சப்ளை செய்வதற்கு ஸ்ரீ கார்த்திகேயா ஏஜென்சீஸ், பெரியகுளம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்ததன் அடிப்படையில், மன்ற அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகவும், ஆனால் முந்தைய செயல் அலுவலரால் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திடமிருந்து ரூ.3,32,207/–க்கு குடிநீர் விநியோகப் பொருட்கள் மற்றும் தெருவிளக்கு உபகரணங்கள் ஆகியன வாங்கப்பட்டு, அனைத்துப்பொருட்களுக்கும் காசோலை மூலம் தொகை வழங்கப்பட்டு, காசாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

- 2021–2022ஆம் ஆண்டு தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பொருட்கள் சப்ளை செய்வதற்கு ஸ்ரீ கார்த்திகேயா ஏஜென்சி, பெரியகுளம் என்ற நிறுவனம் குறைந்த விலைப்புள்ளி அளித்ததன் அடிப்படையில், மன்றத்தினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், முந்தைய செயல் அலுவலர் ரூ.29,449/–க்கான தெருவிளக்கு உபகரணங்கள் மற்றும் குடிநீர் விநியோகப் பொருட்களை விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்து, காசோலை மூலம் தொகை வழங்கப்பட்டு, காசாக்கப்பட்டுள்ளதென்றும் தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம், பேரூராட்சி மன்றத் தீர்மானம் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து குடிநீர் விநியோகப் பொருட்கள் மற்றும் மின் மோட்டார்களை வாங்காமல் தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அதிகார துஷ்பிரயோகத்தினைப் பயன்படுத்தி, ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்து பொருட்களை கொள்முதல் செய்யாமல், தமக்கு வேண்டிய நபரிடமிருந்து பொருட்களை கொள்முதல் செய்து அதற்கான தொகைகளையும் காசோலைகள் மூலம் வழங்கியுள்ளது வெட்ட வெளிச்சமாக்கப்பட்டுள்ளது. இதை தனி ஒருவராக பேரூராட்சி செயல் அலுவலரே அரங்கேற்றியிருக்க வாய்ப்பில்லை என்பதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

- மேலும், பேரூராட்சியில் குடிநீர் விநியோகப் பொருட்கள் வாங்குவதற்கு குடிநீர் விநியோகப் பணியாளர்களின் பொருட்களின் தேவைக்கான விண்ணப்பம் பெறப்பட்டு, பொருட்கள் விநியோகம் செய்யும் நிறுவனத்திற்கு சப்ளை உத்தரவு வழங்கப்படுமென்றும், பொருட்கள் சப்ளை செய்யப்படும்போது நிறுவனத்திடமிருந்து இன்வாய்ஸ் பெறப்படுமென்றும், சப்ளை செய்யப்பட்ட பொருட்களை குடிநீர் விநியோகப் பொருட்கள் இருப்புப் பதிவேட்டில் இருப்பு பதிவு செய்யப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மறைந்த செயல் அலுவலர் திரு. மா.பா. கௌஸ் முகைதீன் என்பவர் விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திடமிருந்து 19.4.2021 வரை வாங்கப்பட்ட

பொருட்களுக்கு காசோலை மூலம் தொகையை வழங்கியுள்ளதாகவும், அனைத்து காசோலைகளும் காசாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான பட்டியல் தொகை அனைத்தும் **4.10.2020** முதல் **6.3.2021** வரையிலானவை என்பது அவரால் அளிக்கப்பட்டுள்ள ஆதார ஆவணங்களின்படி அறியப்படுகிறது. அவ்வாறாயின் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் மீதித் தொகை ரூ.1,66,936/– செலுத்தப்படாமல், எவ்வாறு நிலுவையில் இருந்துள்ளது என்பதும் சந்தேகத்தை எழுப்புவதாகவே உள்ளது.

- 2019–2020, 2020–2021 மற்றும் 2021–2022ஆம் ஆண்டுகளுக்கு குடிநீர் விநியோகப் பொருட்கள் மற்றும் மின் மோட்டார்கள் சப்ளை செய்வதற்கான அங்கீகாரம் ஸ்ரீ கார்த்திகேயா ஏஜென்சி, பெரியகுளத்திற்கு அளிக்கப்பட்டு, மன்ற அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ள நிலையில், பேரூராட்சியின் நடைமுறைகளை மீறி மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகளில் விமலா எலட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திடமிருந்து முறைகேடாக, விதிகளை மீறி கணக்கற்ற குடிநீர் விநியோகப் பொருட்கள், மின் மோட்டார்கள் மற்றும் தெருவிளக்கு உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளதோடு, அவற்றிற்கான தொகை காசோலைகளாக அளிக்கப்பட்டு காசாக்கப்பட்டுள்ளன. இதில் பெரும் முறைகேடுகள் அரங்கேற்றப்பட்டுள்ளது இதன் மூலம் அம்பலமாகிறது.

- பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் தனது கடமையை சரிவர ஆற்றவில்லை என்பது இதன் மூலம் தெள்ளத் தெளிவாகிறது. பேரூராட்சியில் முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் இதனை ஆரம்பகால கட்டத்திலேயே கண்டறிந்திருக்கலாம். ஆனால், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம் இதனை கண்காணிக்க தவறியுள்ளதோடு மட்டுமல்லாமல், இதற்கு துணைபோகியுள்ளது வெளிச்சம்போட்டு காட்டப்பட்டுள்ளளாகவே இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்டுகிறது. இதுபோன்ற முறைகேடுகளில் பேரூராட்சி நிர்வாகங்கள் ஈடுபடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற முறைகேடுகளினால் பேரூராட்சிகளின் அவலநிலை குறித்து மக்கள் மத்தியில் அவப்பெயர் ஏற்படுவதுடன், மக்கள் நம்பிக்கை குறைந்து பேரூராட்சிகளில் முறைகேடுகள் நடைபெறுகின்றன என புகார் மனுக்களை அரசுக்கும், ஆட்சியருக்கும் மற்றும் இம்முறைமன்ற நடுவத்திற்கும் அளிக்கின்றனர்.

- மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள ஆதார ஆவணங்களில் கையால் மையினால் எழுதப்பட்டுள்ள குறிப்புகளில் தாமரைக்குளம் பேரூராட்சியால் அவருக்கு வழங்கப்பட்ட காசோலை எண்.227308/IOB ரூ.9,950/– என குறிப்பிடப்பட்டுள்ளது. பி.பி.வி எண்.43/19.4.2021ல் முந்தைய செயல் அலுவலரால் அதே நிறுவனத்திற்கு ரூ.9,900/–க்கு வழங்கப்பட்டுள்ள காசோலை எண்.227314/IOB என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதே மாதத்தில் அவருக்கான தொகை வழங்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

- மேலும், மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோக இருப்புப் பதிவேட்டில் பொருட்கள் வாங்கப்பட்டதற்கான இருப்புப் பதிவுகள் இல்லை என்றும், குடிநீர் விநியோகப் பொருட்கள் வாங்கப்பட்டதற்கான பட்டியல்களும், எந்தவித ஆவணங்களும் கிடைக்கப்பெறவில்லை என்று தாமரைக்குளம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதில் பெரும் முறைகேடுகள் அரங்கேற்றப்பட்டுள்ளன என்பது ஆதாரபூர்வமாகவும், முறைகேடாக அங்கீகாரமற்ற நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்கப்பட்டதன் அடிப்படையிலும் காணப்படுகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

- பேரூராட்சிகளில் ஒப்பந்தப்புள்ளி, குடிநீர் விநியோகம், தெருவிளக்கு உபகரணங்கள், பொதுச் சுகாதாரம் ஆகியவற்றிற்கு நடைமுறையில் உள்ள விதிகள் யாவும் பேரூராட்சி செயல் அலுவலர்களால் முறையாக கடைபிடிக்கப்படுவதில்லை என்பதும், காசோலை வழங்கும் அதிகார வரம்பு முறையாக கையாளப்படுவதில்லை என்பதும் இந்த புகார் மனுவின் மூலம் தெளிவாகிறது. இதனை முறைப்படுத்திடவும், இதுபோன்ற நிகழ்வுகளை இனிவரும் காலங்களில் தவிர்க்கவும் பேரூராட்சிகளின் ஆணையாளர் உரிய உத்தரவுகளை அனைத்து பேரூராட்சிகளுக்கும் அளித்திடவேண்டியது இன்றியமையாததொன்றாகும்.

11. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், தாமரைக்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விவர அறிக்கையில் தாமரைக்குளம் பேரூராட்சியில் குடிநீர் விநியோக இருப்புப் பதிவேட்டின்படி விமலா எலக்ட்ரிக்கல்ஸ், தேனி என்ற நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்கப்பட்டதற்கான இருப்புப் பதிவுகள் இல்லை என்றும், குடிநீர் விநியோகப் பொருட்கள் வாங்கப்பட்டதற்கான பட்டியல்கள் மற்றும் எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை என்றும், எனினும் மனுதாரர் பொருட்களை கொடுத்ததாகக் கூறப்படும் பிளம்பர் திரு. சாமிராஜ் என்பவரிடம் விசாரித்தும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் ஆலோசித்தும் மனுதாரருக்கு சேரவேண்டிய தொகையை வழங்குவது குறித்து ஆவன செய்யப்படுமென்று உறுதி அளித்துள்ள நிலையிலும், இப்புகார் மனுவின் அடிப்படை ஆதாரங்களின்படி இதில் பெரிய அளவில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுவதாலும், இதுகுறித்து பேரூராட்சியின் ஆவணங்களை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் மேல்நடவடிக்கையை தொடருமாறும், விதிமுறைகளைப் பின்பற்றாமல் தன்னிச்சையாக செயல்பட்டு முறைகேடுகளுக்குக் காரணமான பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் மண்டல உதவி இயக்குநர்கள் மீது உரிய விதிகளின்கீழ் கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு கடுமையான தண்டனைகளை வழங்கிடுமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளரை அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. மனுதாரரின் புகார் மனுவின் அடிப்படையில், இந்நேர்வில் மனுதாரரையும் விசாரித்து அவரது ஆதார ஆவணங்களை ஆராய்ந்து, புகார் மனுவின் உண்மைத் தன்மையின் அடிப்படையில் விதிகளுக்குட்பட்டு மேல்

நடவடிக்கையினை மேற்கொண்டு தீர்வு காணுமாறும் பேரூராட்சிகளின் தேனி மண்டல உதவி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை (Local Fund Audit) இயக்குநர் இப்புகார் குறித்து சிறப்பு ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

பேரூராட்சி நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு மோசடிகள் பல்வேறு கோணத்தில் அரங்கேற்றப்பட்டுள்ளதை இம்முறைமன்ற நடுவம் கண்டறிந்து சுட்டிக்காட்டியுள்ள நிலையில், ஒட்டுமொத்த நிர்வாகத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அணுகுமுறை மற்றும் ஒருங்கிணைந்த விதிமுறைகள் ஆகியவற்றை வகுத்து அனைத்து பேரூராட்சிகளும் அவற்றை முறையாக கடைபிடிக்க தக்க ஆணைகளை பிறப்பித்திடுமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. M. சிவசங்கரன்,
விமலா எலக்ட்ரிக்கல்ஸ், 264E, சுப்பன் தெரு தேனி–625 531.
செயல் அலுவலர், தாமரைக்குளம் தேர்வுநிலை பேரூராட்சி,
தாமரைக்குளம், தேனி மாவட்டம்–625 605
மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம், தேனி.
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தேனி மண்டலம், தேனி
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (உறையில் பெயரிட்டு)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

16/3/22

செயலாளர்

15.3.2022

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032